மைகளையும், இடையூறுகளையும் எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அதை விளைவித்துவிட்டுத்தான் வரவேண்டுமென்ற எண்ணத்தில் இருந்தார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வந்திருந்தால் எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாமல், அற வழியில், அண்ணா பாதையில், ஜனநாயக ரீதியில் கறுப்புக்கொடி காட்டுகின்ற நிகழ்ச்சி நடைபெற்றிருக்கும்.

அதுமட்டுமல்ல, அங்கே இரவு 10½ மணிக்கு வருகை தந்தார்கள். அதற்கு முன் அங்கே சாலையிலே யாராக இருந்தாலும், பொதுமக்களாக இருந்தாலும், பட்டுக்கோட்டையிலே 13-வது வார்டிலே சரோஜா என்ற அம்மையாரை மிரட்டி காவல் துறையினரே அடித்து மண்டையை உடைத்தனர். இன்னொருவர், ரெத்தினத்தம்மாள் என்ற அம்மையாரை, அவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், அவர்கள் 13-வது வார்டிலே குடியிருப்பவர்கள், அவர்களை வீட்டில் நுழைந்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். இப்படி முதலமைச்சர் வரும் நேரத்தில் பொது மக்கள் யாருமே இருக்கக்கூடாது என்ற நிலைமையை உருவாக்கிவிட்ட பிறகுதான் முதலமைச்சரவர்கள் அங்கே வருகை தந்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அங்கே இந்த அளவிற்கு அராஜகம், இந்த அளவிற்குக் கொடுமைகள், கொடுமைப்படுத்தும் காரியங்கள் செய்யப்பட்டு வருகிறதே தவிர வேறல்ல. அதுமட்டுமல்லாமல், அடிபட்டு நிற்கக்கூடிய அப்படிப்பட்டவர்களின்மீது தவறான முறையில், உண்மைக்கு மாறான வழியில், பொய்யான வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். அங்கே காவல் துறையினர் அடித்திருந்தாலும் கூட அங்கேயிருக்கும் வளைவுகளை அறுத்ததாக இப்படி ஏதேதோ செக்ஷன்களில் போட்டு அவர்கள் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். பல ஊராட்சி மன்றத் தலைவர்கள், அமைப்பாளர்கள், இன்னும் நிகழ்ச்சிக்கே வாராதவர்கள்மேல்கூடத் தவறாக வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தவிதமான ஆயுதமும் இல்லாமல், அறிக்கையின்படி கையிலே கறுப்புத்துணியோடு, காகிதத்தோடு, குச்சிகூட கொண்டுவராமல் இருந்த அவர்களை அடித்து நொறுக்கிவிட்டு அவர்கள் மேலேயே கேஸ் போட்டிருப்பது எந்தவகையிலே நியாயமிருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆனால் இந்த சுளுக்கிகளைக் கொண்டுவந்தவர்களின் மேல், ஈட்டிகளைக் கொண்டு வந்தவர்களின் மேல், இப்படிப்பட்ட பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு வந்தவர்களின் மேல், எப்படி லாரிகள் மூலம் கொண்டுவந்தார்களோ அவர்களின்மீது ஏனோ இந்த வழக்குகள் போடப்படவில்லை. அவர்களை அரெஸ்ட் செய்யவில்லை. எனவே இந்த அளவிற்கு ஒரு சார்பாக, நேர்மையற்ற முறையிலே நிர்வாகம் நடைபெற்று வருகிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.